Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

UNDERGRADUATE LIBRARY ... COLLEGE
15 MAY 1972

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண்; 49 மலர் 14
போன் 389 தேசிய தினசரி இதழ் 95
யாழ்ப்பாணம் வைகாசி 2 ரபி; ஆகிர் 1 திங்கட்கிழமை (15-5-72)

...னைத்துச் சிறந்தது
டாலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன
... கொழும்பு

# பிரதமர் விரைவில் வடக்கே வருவார் என்கிறார் மஹ்மூத்

'அரசினர் பாடசாலைகளை

## மக்கள் பாடசாலைகள் என்றே அழைக்கவேண்டும்"

— கல்வி அமைச்சர்

மாவிட்டபுரம், ஞாயிறு 'அரசினர் பாடசாலை என வழங்கப்படும் பாடசாலைகள் எல்லாம் மக்களின் பாடசாலைகள் - மக்கள் பாடசாலைகள் என்றே அழைக்கவேண்டும்' என்று கல்வியமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் உடுவில் தொகுதியில் உள்ள இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வுகூடத்தையும், தொழிற்கூடத்தையும் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

கல்விப்பகுதி அதிபர் திரு. என் இன்னத்தம்பியின் நன்கொடையில் 26 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூடத்தைத் திறந்துவைத்த பின் 'காங்கேசன்' அதிபர் திரு ஐ சங்கரனின் உதவியுடன் அமைக்கப்பட்ட மரவேலைத்தொழில் கூடத்தையும் திறந்துவைத்தார்.

வண்ணைக்காட்டுப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னைய்ந்த மாணவ, மாணவிகள் அணிவகுத்துநிற்க சிறுமியர் நடனமாடிச்சென்று அமைச்சரிற்கும் மேலதிக நிரந்தரச் செயலாளர் கே எச் எம் சுமதிபாலாவுக்கும் மாலை அணிவித்து வரவேற்றனர்.

வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கச் சார்பில் தலைமையாசிரியர் திரு இ. இராசலிங்கம் தலைமையில் நடந்த வரவேற்பில் அமைச்சர் மேலும் பேசுகையில் இவ்வித்தியாலய ஆய்வு கூடத்தையும் தொழிற்கூடத்தையும் அமைத்துக்கொடுத்த இருவருக்கும் அரசின் சார்பில் நன்றிதெரிவித்தார்.

"இப்படியான வசதிகள் இன்று நாடெங்கிலும் அவசியம் தேவை" என அமைச்சர் சொன்னார்.

அமைச்சர் மேலும் பேசியதாவது: "பிரிட்டிஷ் ஆட்சியில் அரசினர் பாடசாலைகள் என்ற பெயர் இருந்தது. அப்பெயர் பொருந்தும். பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து விடுபட்டு சுதந்திரம் பெற்றபின் எங்கள் பணத்தின்மூலம் எங்களால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகள்மூலம் அமைக்கப்பட்ட பாடசாலைகள் ஏன் மக்கள் பாடசாலை

(2ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி ஆசிரியர் பிரச்னையும் தீரும் என அமைச்சர் வாக்குறுதி

யாழ்ப்பாணம், திங்கள் "வடபகுதி மக்களின் நிலையை பல அமைச்சர்கள் நேரில் கண்டறிந்தனர். எமது பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் தமிழ் மக்களைச் சந்திக்க மிக விரைவில் வடபகுதிக்கு விஜயம் செய்யவிருக்கின்றார்"

இவ்வாறு வடபகுதி ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக நடத்திய வரவேற்புக்கூட்டத்தில் உரையாற்றிய கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் தெரிவித்தார். வடமாகாண ஆசிரியர் சங்கங்களின் கூட்டுச் சபையின் செயலாளர் திரு. எ. சபாநடேசன் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இந்த வரவேற்புக்கூட்டத்தில் அமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

யாழ்ப்பாண மக்கள் படித்தவர்கள் சிந்தனையுடையவர்கள் திறமையுள்ளவர் என்று எல்லோருக்கும் தெரியும். நான் நேரிலும் கண்டுள்ளேன். இலாபத பொய்ப் பிரசாரங்கள் இனிமேலும் இம்மக்கள் மத்தியில் பலிக்காதென்று நம்புகின்றேன்: வடபகுதியில் உள்ள தமிழ் மக்கள் என்னை வரவேற்ற முறைகள் என்னைவரவேற்கவேண்டாமென்று கூறினவர்களுக்கு ஒரு நல்லபாடமாக அமைந்துள்ளது. தமிழ்ப் பிள்ளைகளும் சிங்களப்பிள்ளைகளும் பரஸ்பரம் நல்லெண்ணத்துடன் பழகும் வாய்ப்பினை ஏற்படுத்தினால் வரும்புலாத உணர்வு இவர்களுக்கு ஏற்படாமல் தடுக்கமுடியும்: இதனால்தான் இரு இனத்தின் குழந்தைகளும் கலந்து கொள்ளக் கூடிய முறையில் ஒரு விளையாட்டுப் போட்டியே இங்கு நடத்தப்பட்டது.

8-ம் பக்கம் பார்க்க

## பூட்டோ பதில் வந்து சேர்ந்தது

புதுடில்லி, மே. 15

பிரதமர் திருமதி இந்திரா காந்தி 'உச்சி' மகாநாடு பற்றி எழுதிய கடிதத்துக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி ஜனாப் பூட்டோ அனுப்பிய பதில் இன்று வந்துசேர்ந்தது. இந்தக் கடிதம் இந்தியாவிலுள்ள சுவிற்சர்லாந்து தூதரகமூலம் புதுடில்லியிலுள்ள பிரதமர் இந்திரா காந்தியின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

## தொலைபேசி துண்டிப்பு

திருக்கோணமலையில்நேற்று நடந்த தமிழரசுக் கட்சி செயற் குழுக்கூட்டம் சம்பந்தமான செய்திகளும் மற்றும் வெளியூர் செய்திகளும் அநுராதபுரத்தில் பெரிய மரமொன்று விழுந்ததால் துண்டிக்கப்பட்ட தொலைபேசித்தொடர்புக் காரணமாக வெளியிட முடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## 1000 தொன் எரிநட்சத்திரம் சந்திரனில் விழுந்தது

ஹூஸ்டன், மே. 15

அம்புலித்தரையில் 1000 தொன் எடையுள்ள எரி நட்சத்திரம் விழுந்ததாக அறிவிக்கப்படுகிறது. அமெரிக்கா "அப்பலோ" விஞ்ஞானிகள் சந்திரனில் நில அதிர்வு பதிவுக் கருவிகளை பொருத்தி வைத்ததினால், இந்த எரி நட்சத்திரம்பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த எரி நட்சத்திரம்பற்றிய ஆராய்ச்சியை ஹூஸ்டன் விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளனர். சந்திரத் தரையின் எந்தப் பகுதியில் விழுந்திருக்கிறது என்பது பற்றிய கணிப்பையும் நில அதிர்வுக் கருவிமூலம் விஞ்ஞானிகள் கணக்கெடுத்தனர்.

குடியரசைக் குறிக்கும் விதத்தில்

## புனித போதியின் கன்று தருவிக்கப்படும்

கொழும்பு, ஞாயிறு குடியரசு தினத்தைக்குறிக்கும் விதத்தில் வட இந்தியாவில் சிராவஸ்தியிலுள்ள போதிமரத்தின் பதியம் ஒன்றை இலங்கைக்கு கொண்டுவந்து நாட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.

விருந்த சமய அனுஷ்டானங்களுடன் இந்த அரசமரக்கன்று இலங்கைக்குக் கொண்டுவரப்படும் உடனையில் இது நாட்டப்படும் என்று தெரிகின்றது.

புத்தபிரான் ஞானம் பெற்ற புனித போதிமரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பதியம் இன்னமும் அநுராதபுரத்தில் இருந்துவருகின்றது. இந்தியாவில் அசோக மன்னர் ஆட்சியின் போது காயாவிலுள்ள அரசமரத்தின் கிளை அநுராதபுரத்துக்கு கொண்டுவரப்பட்டது. காயாவிலுள்ள போதிமரத்தின் பதியமொன்றிலிருந்தே சிராவஸ்தியில் உள்ள மரம் வளர்க்கப்பட்டதாகத் தெரிகின்றது.

(சி. பி. ஏ.)

## இரிதரமில் கையேற்கப்படும்?

கொழும்பு, ஞாயிறு அரசியல் உலகில் பெரும் நெருக்கடியொன்றை முன்பு தோற்றுவித்த இரிதரமில்லை அரசாங்கம் தன்பொறுப்பில் எடுத்துக்கொள்ளப் போவதாகத் தெரிகின்றது.

[8-ம் பக்கம் பார்க்க]

## அமைச்சருக்கு ஊன்றுகோல்!

குருநகர், திங்கள் வடமாகாண ஆசிரியர் சங்கங்களின் சார்பில் கல்வி அமைச்சருக்கு பனைமரத்தால் செய்யப்பட்ட ஊன்றுகோல் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

நேற்று நண்பகல் மேற்படி சங்கங்களால் அமைச்சருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்தில் இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டது. ஜாதிக குருசங்கக் கிளைக் காரியதரிசி திரு. வ. கிருஷ்ணபிள்ளை இதை வழங்கினார்.

## யாழ். மக்கள் நவீன சந்தை திறப்பு விழா

மேற்படி சந்தை இன்று 15-5-72ம் திகதி திங்கட்கிழமை மாலை 6-30 மணிக்கு யாழ்ப்பாண மாநகர முதல்வர் மாண்புமிகு அல்பிரட் த. துரையப்பா ஜே. பி. யு. எம். அவர்களால் திறந்து வைக்கப்படும்.

மேற்படி நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு பொதுமக்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

ஏ. ரி. சுந்தரம்
ஆணையாளர்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.
மாநகராட்சி மன்ற அலுவலகம்
யாழ்ப்பாணம்.
11-5-72. 8972

